176

தப்லீக் வெளியீடு 3

ஜுல்கஃதா 1375

176
3-56

(சன்மார்க்க சாகரம்)

சத்திய சன்மார்க்க போதினி.

(வினா—விடை)

(முதல் பாகம்)

(ஹனபி)

ஆக்கம்:—

ஷேக்முஹம்மத் அப்துல்கபூர் (ரப்பானீ) காதிரி
தஞ்சை ஜில்லா தப்லீக் மர்கஜ்
பெரிய பள்ளிவாசல்,
மன்னார்குடி.

வெளியீடு:— தஞ்சை ஜில்லா தப்லிக் அமீர்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

பிரதி 1000 விலை அணா 5

Q7
N56.
112949

786

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

முன்னுரை.

அல்ஹம்து லில்லாஹில் மலிகில் மன்னான். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸய்யிதில் இன்ஸி வல் ஜான், வ அலா ஆலிஹி வ சஹ்பிஹில் ஹாமியாதுத்தீனி, வல் புன்யான். அம்மா பஃத்:--

அகில உலக முஸ்லிம்களிடையே "தப்லீகு" ஆற்றி வரும் அரும் பெரும் தொண்டின் விளைவாக ஒவ்வொரு பகுதியிலும் ஆயிரக்கணக்கான மாந்தர் ஆத்மீக வளர்ச்சியுற்றவர்களாயும், சன்மார்க்கப் புத்துணர்ச்சி பெற்றவர்களாயும் திகழ்வதை, மனுவர்க்கம் இன்று கண்ணுற்று, அனைவரும் இவ்வடிப்படையை ஏற்றும், கடைப்பிடித்தொழுகியும், இகபர ஈடேற்றத்திற்குரியவர்களாகவேண்டுமென முற்பட்டுக்கொண்டிருக்க, இவ்வரும்பெரும் அருட்கொடைகளையும், பாக்கியங்களையும் அருளப்பெற்ற அருமை நாயகம் முஹம்மத்முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்களின் உம்மத்துகளாகிய நம்மோரின் பெரும்பான்மை, இன்னும், அறியாமையிலும், அந்தகாரத்திலும் "ஆகிரத்தை"ப் பற்றிய அலட்சிய வாழ்க்கையிலும் ஆழ்ந்துகொண்டு போய்க்கொண்டிருக்கிறது. இதன் மூல காரணங்கள் முஸ்லீம்களின் பெரும்பான்மையின் சன்மார்க்க அஞ்ஞானமும், அத்துடன் சீர்கெடுக்கும் சமுதாய சூழ்நிலையும் சற்குணங்களை சீரழியச்செய்து, பாதகங்களைப் பரத்தும் நாகரீக ரீதிகளும், நவீன கலாசாரங்களுமேயாகும்.

ஆகவே இக் கோர நிலையில் இவ்வாத்மீக வீழ்ச்சி யுற்றுப்போகும் இச் சமுதாயத்தை, சன்மார்க்க பிரசாரங்கள் மூலமும், நலனைப் போதித்துப் பரத்துவதின் மூலமும், சன்மார்க்க கலைகள் மிகுதமாகப் புகட்டப் படுவதின் மூலமும், நீதி நெறியில் நிலை பெறச்செய்வது ஒவ்வொரு சன்மார்க்க அபிமானியின் பேரிலும் ஏற்பட்ட, தவிர்க்கமுடியாத அத்யாவசிய கடமையாகும். இதுவே முஸ்லிமின் ஜீவிய லட்சியமாகயிருக்கவேண்டும். இப்பொருப்பை நிறைவேற்றவே இவன் அல்லாஹ்வினுல் சிருஷ்டிக்கப்பட்டான். இந்நோக்கத்துடனேயே இச்சிறு வெளியீடும் சுருக்கமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது மூன்று அத்தியாயமாகவும் ஒரு முடிவுரை துஆ உடனும், பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. முதல் அத்தியாயத்தில் "அகாயித்" (கொள்கைகள்) சம்பந்தப்பட்ட விளக்கங்களும், ஒரு முஸ்லிம் அத்யாவசியமாக அறிய வேண்டிய அம்சங்களும் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது மூன்ருவது அத்தியாயங்கள் "அஹ்காம்" (கிரிகைகள்) சம்பந்தப்பட்டவைகளாகும். கிரியைகளில் இஸ்லாத்தின் அடிப்படைத் திட்டமாகிய தொழுகையும், அதற்குறிய அத்தியாவசியங்களும் இவ்விரு அத்தியாயங்களில் சுருக்கமாக வர்ணிக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு அத்தியாயங்களின் வினு விடைப் பகுதி ஹஜ்ரத் மௌலானு முப்தீ அஃலம் அல்ஹாஜ முஹம்மத் கிபாயதுல்லாஹ் சாஹிப் (தெஹ்லவீ) (மர்ஹூம்) அவர்களின் "தஃலீமுல் இஸ்லாம்" என்னும் கிதாபின் முதல் பாகத்தின் மொழிபெயர்ப்பாகும். வட நாட்டின் சர்வ ஆரம்ப மத்ரசாக்களிலும், முஸ்லிம் பிள்ளைகளுக்கு இக் "கிதாபு" கற்பிக்கப்படுகின்றது. மூன்ருவது அத்தி

யாயம் பூராவும், முதல் இரண்டு அத்தியாயங்களிலுள்ள விளக்கங்கள், குறிப்புகள், முக்கிய மஸ்அலாக்கள் யாவும், இவ்வெளியோனல், போதிய தேவையைப் பூர்த்திசெய்யவேண்டி, சேர்க்கப்பட்டுள்ளது. வட நாட்டைப்போல தென்னுட்டு ஆரம்ப சன்மார்க்கக் கலை மன்றங்களிலும் முஸ்லிம் பிள்ளைகளுக்கு வினு விடை ரூபத்தில் போதித்துக் கொடுக்க இச் சிறு பிரசுரம் ஆதாரமாக விளங்குமென அல்லாஹ்வைக்கொண்டு ஆதரவு வைக்கிறேன். எல்லாம் வல்ல ஏக பராபரனுகிய அல்லாஹ், எம் மிறைவள்ளல் சையிதினு ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் பொருட்டால் இச்சிறு முயற்சியை அங்கீகரித்து அருள்புரிவாருகவும்.

தப்லீக் மர்கஜ்
மன்னார்குடி,
14—6–56.

ஷேக்முஹம்மத் அப்துல்கபூர்
(ரப்பானீ) காதிரீ.

உள்ளுரை.

பிரிவு		பக்கம்.
1.	இஸ்லாம் விளக்கம் ...	1
2.	கலிமா விளக்கம் ...	
3.	ஈமான் விளக்கம்	2
4.	குப்ருஷிர்க்கின் விளக்கம்	3
5.	நபிகள் நாயகம் (ஸல்) விளக்கம் ...	5
6.	திருகுர்ஆன் விளக்கம்	7
	“உம்மீ” நபி விளக்கம்	8
7.	ஹஜ்ரத் ஜிப்ரில் (அலைஹி) விளக்கம் ...	10
8.	தொழுகை விளக்கம்	
9.	ஒளு விளக்கம் ...	11
10.	கிப்லா விளக்கம்	
11.	ஐங்காலத் தொழுகை விளக்கம் ...	12
12.	அஜான் விளக்கம்	13
	“அஜான்” முறை	14
13.	இகாமத்து தக்பீர் விளக்கம் ...	15
14.	ஜமாஅத் தொழுகை விளக்கம்	
15.	மஸ்ஜித் விளக்கம் ...	16
16.	தொழுகை விளக்கம்	17
	தொழுகை விபரம் — தொழுகையின் தேவை	
	தஅவ்வுது, தஸ்மிய்யா, சூரத்துல் பாதிஹா	18
	சூரத்துல் அசர், சூரத்துல் கௌதர், சூரத்துல் இக்லாஸ், சூரத்துல் பலக்	20
	சூரத்துன்னாஸ், ருகூஃ	21
	கௌமா — சஜ்தா	22
	முக்கிய குறிப்புகள் (மஸ்அலாக்கள்) ...	24
	அத்தஹிய்யாத்து	25
	தருதே இப்ராஹிம், துஆ மாதூரா, துஆ சலாம்	26, 27
	குனூத்துடைய துஆ	28
	அர்கானுல் இஸ்லாம்	30
	தொழுகையின் ஷரத்து, நிய்யத்து, நஜாசத்து, தஹாரத்து	31
	முழுக்கின் பரலுகள் — ஒளு — தயம்மும்	33
	தொழுகையின் ரகஅத்துகள் விபரம் ...	35
	இஸ்லாத்தின் கடமைகள் ...	36
	இமாம் ஜமாஅத்து தொழுகை ...	37
	பிரயாணியின் கஸ்ரு தொழுகை ...	39
	முடிவுரை — துஆ.	40

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

அத்தியாயம் I.

1. இஸ்லாம் விளக்கம்.

வினா:— நீர் யார்? உம்முடைய மார்க்கம் எது?

விடை:-நான் முஸ்லிம். இஸ்லாம் என்னுடைய மார்க்கம்.

வினா:— முஸ்லிம்களின் மதத்தின் பெயர் என்ன? உம்முடைய மதம் யாது?

விடை:— இஸ்லாம்.

வினா:— இஸ்லாம் என்ன கற்பிக்கின்றது. எந்த மதம் இஸ்லாம் எனக் கூறப்படுகிறது?

விடை:-சர்வ சிருஷ்டி கர்த்தாவும், சர்வலோக இரட்சகனுமாகிய "அல்லாஹ்" ஒருவனென்றும், அவனே வணக்கம், வழிபாட்டிற்குரியவன், என்றும் ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள், அல்லாஹ்வின் அடியாரும், திருத்தூதருமென, இஸ்லாம் கற்பிக்கிறது. "குர்ஆனே ஷரீப்" என்பது அல்லாஹ்வின் திருவேதம். "இஸ்லாம்" சத்திய, சன்மார்க்க, அம்சங்களையும் இம்மை, மறுமைக்குரிய சர்வ நலவுகளையும், நல்லுபதேசங்களையும் போதிக்கிறது.

2. கலிமா(வின்) விளக்கம்.

வினா:— இஸ்லாமின் கலிமா (அடிப்படை, மூலாதாரம், அல்லது மூல மந்திரம்) எது?

விடை:—இஸ்லாத்தின் கலிமா லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதாகும்.

பொருள்:— "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்கு பாத்திரவான் வேறெவருமில்லை ஹழ்ரத் முஹம்மத்(ஸல்) அல்லாஹ்வின் திருத்தூதராவர்" என்பது இதன் பொருளாகும்.

வினா:— "ஷஹாதத்து கலிமா" என்பது யாது?

விடை:— "அஷ்ஹது அன் லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு"

"அல்லாஹ்வைத் தவிர வணக்கம், வழிபாட்டிற்குரிய நாயன் வேறில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். மேலும் நிச்சயமாக ஹழ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள், அவனின் (அல்லாஹ்வின்) அடியாரும் திருத்தூதருமாவரென நான் சாட்சி கூறுகிறேன்."

3. ஈமான் விளக்கம்.

வினா:— ஈமான் முஜ்மல் என்பது யாது? (பொதுவாக ஈமான் கொள்வது)

விடை:— ஈமான் முஜ்மல் என்பது.

"ஆமன்து பில்லாஹி கமாஹுவ பிஅஸ்மாயிஹிவ ஸிபாதிஹி வ கபில்து ஜமீஅ அஹ்காமிஹி"

பொருள்:— "அல்லாஹ்வை, அவனது சர்வதிரு நாமங்களைக் கொண்டும், சர்வ லட்சணங்களைக் கொண்டும், அவன் எவ்வாறுள்ளானோ, அவ்வாறு நான் ஈமான் கொண்டு (விசுவாசித்து) அவனது சர்வ கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டேன்"

வினு:— ஈமான் முபஸ்ஸல் என்பது யாது? (சவிஸ்தார மாக விசுவாசித்தல்)

விடை:— ஈமான் முபஸ்ஸல் என்பது கீழ்க்கண்டவாறு:

"ஆமன்து பில்லாஹி வ மலாயிகதிஹி வ குதுபிஹி வ ருஸுலிஹி வல் யௌமில் ஆகிரி-வல் கத்ரி கைரிஹி வ ஷர்ரிஹி மினல்லா ஹித ஆலா வல் பஃஸி பஃதல் மௌத்.

பொருள்:- அல்லாஹ்வைக்கொண்டும், அவனது மலக்குகளைக் கொண்டும் (வானவர்-அமரர்) அவனது திரு வேதங்களையும், அவனது திருத்தூதர்களான நபிமார்களை யும் இறுதி நாள் என்னும் கியாமநாளையும், நன்மை தீமை யாவும் அல்லாஹ்வின் புறத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ள தென்பதையும் மரணத்திற்குப் பின் எழுப்பப் படுவதையும் (ஆகிய இவை யாவற்றைக் கொண்டும்) நான் ஈமான் கொண்டேன் (விசுவாசித்தேன்)

விளக்கம்:— முதலில் கூறப்பட்டது அல்லாஹ்வின் பேரில் பொதுவாக விசுவாசங் கொள்ளல். எப் பொழுது அல்லாஹ்வைக் கொண்டு சம்பூரணமாக ஈமான் கொண்டோமோ, அப்பொழுது அவனது சர்வ சக்தியையும், வேதங்களையும், சர்வ வல்லமைகளையும் ஏற்றுக்கொண்டதாகும். இதை விளக்கமாகவும், விபர மாகவும் ஏழு அம்சங்களாகப் பிரித்து ஈமான் முபஸ்ஸலில் அறிவிக்கப்பட்டுள்ளது.

4. குப்ரு ஷிர்க்கின் விளக்கம்

வினு:— உங்களைச் சிருஷ்டித்தவன் யார்?

விடை:— நம்மையும், நம் பெற்ருேர், மூதாதை, முன்னேர், ஏழு வானங்கள், ஏழு பூமி, அதற்கிடையே உள்ள அனைத்தையும், சர்வ சிருஷ்டிப் பொருள்களையும், ஏகவல்லோனுகிய அல்லாஹ்வே படைத்தான்.

வி:—அல்லாஹ், உலகை, எந்த வஸ்துவைக் கொண்டு படைத்தான்.

விடை:— தன் ஒப்புயர்வற்ற அபார சக்தியைக் கொண்டும், தனது ஏவலைக் கொண்டும் படைத்தான்.

வி:— அல்லாஹ்வை விசுவாசிக்காதவர்கள், எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

விடை:— அவர்கள் "காபிர்" (நிராகரிப்பவன் —மறுப்பவன்) எனக் கூறப்படுவர்.

வி:— "அல்லாஹ்வைத்" தவிர இதர (சிருஷ்டி)ப் பொருள்களை வணங்குபவர், பூஜிப்பவரை யாது கூறுவது?

விடை:— இத்தகையோர் "காபிர்" என்றும் "முஷ்ரிக்" (இணைவைப்பவர்) கென்றும் கூறப்படுவர்.

வி:— ஒன்றைவிட பல தெய்வக் கொள்கைக்காரர்களை யாது கூறுவது?

விடை:— அவர்களும் "காபிர்" "முஷ்ரிக்" கென்று தான் அழைக்கப்படுகின்றனர்.

வி:— கியாமநாளில் இம் முஷ்ரிக்குகள் மன்னிக்கப் படுவார்களா? ஈடேற்றம், நஜாத்து அடைவாரா?

விடை:— கியாமநாளில் முஷ்ரிக்குகள் அறவே மன்னிக்கப்பட மாட்டார்கள். கொடூரமான வேதனையில் நிரந்தரமாக ஆழ்த்தப்படுவர்.

5. நபிகள் நாயக (ஸல்) விளக்கம்.

வினா:— ஹஜ்ரத் முஹம்மத்(ஸல்) அவர்கள் யார்?

விடை:— ஹஜ்ரத் முஹம்மத் அல்லாஹ்வின் திருத்தூதரும், அடியாருமாவர். நாம் அன்னாரின் உம்மத்துகள். (பின்பற்றியவர்)

வினா:— நமது நபிநாதர் (ஸல்) எங்கு அவதரித்தார்?

விடை:— அரபு நாட்டைச் சேர்ந்த "மக்கா"வென்னும் ஊரில் அவதரித்தார்.

வினா:— அன்னாரின் பெற்றோர், பாட்டனார் பெயர்கள் யாவை?

விடை:—அன்னாரின் தகப்பனார் பெயர் "அப்துல்லாஹ்"வும், பாட்டனார் பெயர் "அப்துல் முத்தலிப்" என்பதாம்

வினா:— நமது நபிகள் நாயகம், (ஸல்) எல்லா நபிமார்களை விட அந்தஸ்தில் உயர்ந்தவர்களா? தாழ்ந்தவர்களா?

விடை:— நமது நபிகள் நாயகம் (ஸல்) எல்லா நபிமார்களைவிட அந்தஸ்தில் உயர்ந்தவரும், அல்லாஹ்விடத்தில் சர்வசிருஷ்டிகளைவிட உகப்பும் கண்ணியத்திற்குரியவருமாவர்.

வினா:— ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் ஆயுள் முழுவதும் எங்கு வசித்தனர்?

விடை:— ஐம்பத்துமூன்று வயதுவரை தாங்கள் பிறந்த "மக்கா"விலிருந்தனர். பின் அல்லாஹ்வின் ஏவலின் படி "மதினா" சென்று, அங்கு பத்துவருஷகாலம் ஜீவித்திருந்து அறுபத்துமூன்று வயதில் அல்லாஹ்வை அடைந்தனர்.

வினா:— ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களை ஒருவன் ஒப்புக்கொள்ளா விட்டால், அவன் எவ்வாறு கருதப்படுவான்?

விடை:— எவன் பெருமானாரை (ஸல்) அல்லாஹ்வின் திருத்தூதராக ஒப்புக்கொள்ளவில்லையோ, அவனும் "காபிராக"த்தான் கருதப்படுவான்.

வினா:— ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களை ஒப்புக்கொள்ளவில்லை என்பதின் கருத்து என்ன?

விடை:— அன்னாரை [ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்)] ஒப்புக்கொள்வதென்பது அன்னார் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட திருத்தூதரென்றும், சர்வ சிருஷ்டிகளிலும் உயர்வானவரென்றும், உறுதி விசுவாசங் கொள்வதும், அன்னாரை, யாவற்றையும் விட உகப்பதும், அன்னாரின் நடைமுறையையும், அடிச்சுவற்றைப் பின்பற்றி நடப்பதும், அன்னாரிட்ட கட்டளைகளைக் கடைப்பிடித் தொழுகுவதுதான், அன்னாரை ஒப்புத்கொண்டதின் கருத்தாகும்.

வினா:— ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ரசூல் (திருத்தூதர்) என்பது எவ்வாறு விளங்குகிறது?

விடை:—அன்னாரின் உச்ச ஒழுக்கங்களையும், உன்னத செயல்களையும், புனித ஜீவியத்தின் நடைமுறைகளையும், திருக்கூற்றுகளையும், சுருங்கக்கூறுமிடத்து சொல், செயல், சிந்தனை முதலியவற்றை நோட்டமிட்டுப் பார்க்குங்கால், அல்லாஹ்வின் திருத்தூதர்களைத் தவிர வேறெவரும் இத்தகைய விசேஷத்துவங்களை, ஒருங்கே பூண்டவராக இருக்க முடியாது என்பது விளங்குகிறது.

6. திருகுர்ஆன் விளக்கம்.

வினா:— திருகுர்ஆன் அல்லாஹ்வின் வேதம் என்று எவ்வாறு நிர்ணயிப்பது?

விடை:—ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களே, அல்லாஹ் தமதுபேரில் இத்திரு வேதத்தை இறக்கியருட்புரிந்ததாக அறிவித்துள்ளனர். தவிர இத்திருமறையின் ஒவ்வொருதிருவசனமும், தான் சர்வ வல்லோனாகிய அல்லாஹ்வின் "கலாம்" (மொழி—சொல்) என்பதற்கு பஹிரங்க சான்றாக யிருக்கிறது).

வினா:— பெருமானார் (ஸல்) அவர்களின் பேரில் திருகுர்ஆன் முழுவதும் ஒரே தடவையில் இறக்கப்பட்டதா? அல்லது பல்வேறு தருணங்களிலா?

விடை:— சிறிது சிறிதாக பல்வேறு தருணங்களில் இறக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் ஒரு ஆயத்து, சிலநேரங்களில் இரண்டு நான்கு ஆயத்துகள், சில வேளைகளில் ஒரு சூரத்து முழுதுமாக, இவ்வாறு பல்வேறு தருணங்களில் இறக்கப்பட்டுள்ளது.

வினா:— எவ்வளவு காலத்தில் திருகுர்ஆன் முழுவதும் இறக்கப்பட்டு பூர்த்தியானது?

விடை:— இருபத்திமூன்று வருஷ காலத்தில் சிறிது சிறிதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இறக்கப் பட்டு சம்பூரணமானது.

வினா:— எவ்விதம் திருகுர்ஆன் இறக்கப்பட்டது?

விடை:— ஹஜ்ரத் ஜிப்ரீல் (அலைஹி) அவர்கள் பெருமா னார்(ஸல்) அவர்களிடம் வந்து, ஒரு ஆயத்தையோ, சூரத்தாகவோ, அறிவித்து ஓதிக்காட்டுவார்கள். பெருமானாரு (ஸல்)ம் செவியுற்று, தானும் ஓதி பாராயணம் செய்துகொள்வதுடன் எழுதக்கூடிய வர்களைக் கூப்பிட்டு, அப்போதைக் கப்போது, வந்த ஆயத்துக்களையோ, சூரத்துக்களையோ எழுதச்செய்து, அல்லாஹ்வின் திருவசனங்களை எழுத்து ரூபத்தில் சேகரமாக்கிக் கொள்வார்கள்.

வினா:— பெருமானார் (ஸல்) தாமே என் திருக்குர் ஆனுடைய ஆயத்துக்களையோ சூரத்துக்களையோ எழுதுவதில்லை. "உம்மீயின் விளக்கம்".

விடை:— பெருமானார் "உம்மீ" (எழுதப்படிக்கத் தெரி யாதவர்கள்) யாக யிருந்ததினால், தாமே எழுதுவ தில்லை.

வினா:— "உம்மீ" எத்தகையோரைக் கூறுவது?

விடை:— யார் எழுதப்படிக்க ஒருவரிடமும் கற்றுக் கொள்ளவில்லையோ, அன்னாரை "உம்மீ" என்று கூறுவது. பெருமானார் (ஸல்) உலக ரீதிப்படி ஒருவரிடமும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வில்லையாயினும், அல்லாஹ் (ஜல்லஷானஹூவத

ஆலா) சர்வ சிருஷ்டிகளைவிட மஹோன்னதமான கலா ஞானங்களைத் தன்னுடைய புறத்திலிருந்தே, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு, தந்தருட்புரிந் திருந்தான்.

குறிப்பு:— (பெருமானாரின் (ஸல்) மஹோத்வத்தை மனுவர்க்கத்திடையிலும், ஜின்னு வர்க்கத்திடையிலும், பிரஸ்தாபிக்கவேண்டியே, வல்லநாயன் அன்னாரை(ஸல்) உம்மியாகவே வளரச்செய்து, சர்வ ஆத்மீக, மெய் யான, விஞ்ஞான போதங்களை தனது புறத்திலிருந்து தந்தருட்புரிந்தான்.)

விளக்கம்:— கல்வியையும் ஞானத்தையும் சிருஷ் டித்தவனும் அவனே. அதை மக்களுக்கு புகட்டு பவனும் அவனே. போதகனுக்கு போதிய அறிவு, ஆற்றல், புகட்டக்கூடிய திறமை, தந்தருள்பவனும் அவனே. ஞானம், அறிவு, கல்வி இவைகள் மனு சரீரத் தில் தரிபட்டு வளர்ச்சியுறக்கூடியதும் விருத்தியடையக் கூடியதுமான தலங்களை மனு சரீரத்தில் சிருஷ்டித்து வைத்தவனும் அவனே. இத்தகைய சர்வவல்லோன் நாடினனேயானல், போதகனின்றி, பயிற்சி யின்றி, வாசகமின்றி, வரைதலின்றி, கல்வி, அறிவு, ஞான போதங்களை புகட்ட முடியாதா? இத்தகைய சர்வ வல்லமையை வெளிப்படுத்தவேண்டியே, அல்லாஹ் பெருமானாரை (ஸல்) அவர்களை 'உம்மியாகவே' வைத்து வளரச்செய்து, ஒப்புயர்வற்ற, உலகசிருஷ்டி முதல் உற் பத்தியாகாத (உலக அந்தம்) கியாமநாள் பரியந்தம் காணமுடியாத, சர்வலோக போதகராகவும், சத்திய சன்மார்க்க தூதராகவும், சற்குண சீலராகவும், அண்ட பகிரண்டங்கள் அனைத்திலும் பிரகாசிக்கச்செய்தான்.

7. ஹஜ்ரத் ஜிப்ரில். (அலைஹி)

வினா:— ஹஜ்ரத் ஜிப்ரீல் (அலைஹி) என்பவர் யார்?

விடை:— மலக்குகளில் ஒருவர். எல்லா மலக்குகளினும் சிறப்புவாய்ந்தவர். அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏற்படக்கூடிய ஆக்ஞை, ஏவல், வஹீ முதலிய வற்றை அவனது தீர்க்கதரிசிகள் அளவில் எத்தி வைப்பவர்.

8. தொழுகை விளக்கம்.

வினா:— முஸ்லிம்கள் அல்லாஹ்வின் வணக்கத்தை எவ்வாறு நிறைவேற்றிவைக்கின்றனர்?

விடை:— தொழுகின்றனர், நோம்பு நோற்கின்றனர். பொருள்களின் பேரில் ஏற்படும் ஜக்காத்தை (சன்மார்க்க வரி)ச் செலுத்துகின்றனர். ஹஜ்ஜை நிறைவேற்றுகின்றனர்.

வினா:— தொழுகை என்பது என்ன?

விடை:— தொழுகை என்பது, அல்லாஹ்வின் வணக் கத்தை நிறைவேற்றிவைக்கும் ஒரு விசேஷ முறை யாகும். இவ்வணக்க முறையை அல்லாஹ் தமது திருக்குர்ஆனினும், பெருமானார் (ஸல்) தமது ஹதிதுகள் மூலமும் நமக்கு தெளிவாக்கியுள்ளார் கள்.

வினா:— "தொழுகை" என்னும் இவ்வணக்கமுறையின் விளக்கமென்ன?

விடை:— வீட்டிலோ, மஸ்ஜிதிலோ, அல்லாஹ்வின் முன்னிலையில் கைகட்டிநின்று, திருக்குர்ஆன் ஓதி,

அல்லாஹ்வின் புகழ் துதி புரிந்து, அவனைத் தூய்மைப்படுத்தி, அவனது முன் பணிந்து, சிரசை பூமியின்பேரில் வைத்து, நெற்றியைத் தேய்த்து அவனது மஹாத்துவத்தையும், தமது அடிமைத் தனத்தையும் பிரகடனப்படுத்தக்கூடிய செயலே "தொழுகை" என்பது.

வினு:— மஸ்ஜிதில் தொழுவதினுல் அடியான் அல்லாஹ்வின் முன்னிலையில் இருப்பதாகக் கருதப்படுவானு அல்லது வீட்டில் தொழுவதினுலா?

விடை:— அல்லாஹ் இல்லாத இடமும், அல்லாஹ் அறியாத ஒன்றும், அவனது சிருஷ்டியிலில்லை. வீட்டில் தொழுதாலும் சரி, மஸ்ஜிதில் தொழுதாலும் சரி, அல்லாஹ்வின் முன் நின்று தொழுவதாகத் தான் தாத்பரியம். ஆனுல் வீட்டில் தொழுது கொள்வதை விட, மஸ்ஜிதில் தொழுவதில் பலன் அதிகம். (பெருமானுர்(ஸல்) அவர்களின் முக்கிய சுன்னத்துமாகும்.)

9. ஒளு விளக்கம்.

வினு:— தொழுவதற்கு முன்பதாக கை, கால், முகம் கழுவிக்கொள்வதை யாது கூறுவது?

விடை:— இதை "ஒளு" என்று கூறப்படும். "ஒளு" வின்றி தொழுகை நிறைவேருது. ஆகவே தொழுக வேண்டுமானுல் "ஒளு" செய்துகொள்ளவேண்டும்.

10. கிப்லா விளக்கம்.

வினு:—தொழுகையில் எப்புறம் முகம் செய்தவர்களாக நிற்கவேண்டும்? (சூரியன் அஸ்தமிக்கும் திக்கு.)

விடை:—மேற்குப்புறம் முகம் செய்தவர்களாக தொழுகையில் நிற்கவேண்டும்.

வினா:— மேற்குப்புறம் முகம் செய்து நிற்கும் காரணம் என்ன?

விடை:— மக்கமாநகரத்தில் "கஃபா" என்ற அல்லாஹ்வின் வணக்க தலம் ஒன்றுள்ளது. தொழுகையில் அக்கிப்லாவின் புறம் முகம் திருப்ப அல்லாஹ் ஆக்ஞை செய்துள்ளான். இப்பரிசுத்த வணக்க ஸ்தலம் நாம் வசிக்கும் பிரதேசங்களுக்கு மேற்குப் புறத்திலுள்ளதால், நாம் தொழுகையில் மேற்குப் புறம் முகம் செய்து நிற்கவேண்டியுளது.

வினா:—தொழுகையில் முகம் செய்து நிற்கும் திசைக்கு யாது கூறுவது?

விடை:— அதை "கிப்லா" என்று கூறுவது (நமது இந்தியாவுக்கு "கிப்லா" மேற்குத் திக்கில் அமைந்துள்ளதால் மேற்குப் புறம் நோக்கி தொழுகின்றோம்.)

11. ஐங்காலத் தொழுகை விளக்கம்.

வினா:— பகல் இரவு தோறும் எத்தனை முறை தொழுகை நிறைவேற்றப்படுகிறது?

விடை:— இரவு பகலில் (ஒரு நாளில்) ஐங்காலத் தொழுகை கடமையாக்கப் பட்டுள்ளது.

வினா:— அவ்வைங்காலத் தொழுகைகளின் பெயர்கள் என்ன?

விடை:— முதல்-தொழுகை "பஜ்ருடைய தொழுகை" (காலே வணக்கம்) சூரிய உதயத்திற்கு முன்பதாக நிறைவேற்றப்படுகிறது.

இரண்டாவது— "லுஹருடைய தொழுகை" (மத்தியான வணக்கம்) சூரியன் உச்சியடைந்து சிறிது சாய்ந்தபின் நிறைவேற்றப்படுகிறது.

மூன்ருவது— "அசருடைய தொழுகை" (சாயங்கால வணக்கம்) சூரிய அஸ்தமனத்திற்கு ஒன்றரை அல்லது இரண்டு மணி நேர முன்னதாக நிறைவேற்றப்படுகிறது.

நான்காவது— மஃரிப்புடைய தொழுகை (சூரிய அஸ்தமன இரவு ஆரம்பத் தொழுகை) சூரியன் அஸ்தமித்தவுடன் நிறைவேற்றப்படுகிறது.

ஐந்தாவது— "இஷாத் தொழுகை" (இராக்காலத் தொழுகை) சூரியன் அஸ்தமித்து (இரவான) ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரத்திற்குப் பின் நிறைவேற்றப்படுகிறது.

12. அஜான் விளக்கம்.

வினா:— "அஜான்" என்பது யாது?

விடை:— தொழுகையின் நேரம் வந்தவுடன், தொழுகை நிறைவேற்றப்படுவதற்கு சிறிது நேர முன்பதாக ஒருவர் எழுந்து உறத்த சப்தத்துடன் கீழ்க்கண்ட அரபிப் பதங்களேக்கொண்டு, தொழுகைக்காக அழைப்பிடும் ஒரு செயலாகும். (தொழுகையழைப்பாகும்.)

முறை.

ஒவ்வோரு பதத்தையும் இரண்டு இரண்டு தடவை, முன்பின்னுக்காமல், கீழ்க்கண்ட முறைப்படி கூற வேண்டும். கடைசி, ஏழாவது பதத்தை மட்டும் ஒரு தடவை கூற வேண்டும்,

1. *அல்லாஹு அக்பர் — அல்லாஹு அக்பர்.*
2. *அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் —*
   அஷ்ஹது அன் லாயிலாஹ இல்லல்லாஹ்.
3. *அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்*
   அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்
4. *ஹைய அலஸ் ஸலாத்*
   ஹைய அலஸ் ஸலாத்
5. *ஹைய அலல் பலாஹ்*
   ஹைய அலல் பலாஹ்
6. *அல்லாஹு அக்பர்*
   அல்லாஹு அக்பர்
7. *லாயிலாஹ இல்லல்லாஹ்*

மேற்கண்ட சொற்களுக்கு "அஜான்" என்று கூறுவது.

காலைத் தொழுகைக்குக் கூறப்படும் அஜானில் "ஹைய அலல் பலாஹு" (ஐந்தாவது)க்குப் பிறகு அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌம், அஸ்ஸலாத்து கைரும் மினன் நௌம் என்று இருமுறை கூறவேண்டும்.

குறிப்பு:— *"ஹைய அலஸ்ஸலாத்" என்று கூறுங்கால், வலது பக்கமும், "ஹைய அலல் பலாஹ்" என்று கூறுங்கால் இடது பக்கமும் முகம் திருப்பவேண்டும். மீதி யாவற்றிலும் முகம் கிப்லாவை நோக்கி இருந்தால் போதுமானது.*

13. இகாமத் தக்பீர் விளக்கம்.

வினு:— "தக்பீர்" என்று எதற்குச் சொல்லுவது?

விடை:— தொழுவதற்கு நின்றவுடன், (தனித்தோ, ஜமா அத்துடனே) தொழுகை ஆரம்பிப்பதற்கு முன்பதாக, முன் சொல்லப்பட்ட "அஜானு"டைய சொற்களை மெள்ள மெள்ள (உரத்த சப்தமின்றி)ச் சொல்லி ஹய்ய அலல்பலாஹுக்குப்பின் "கத்காமதிஸ்ஸலாத்" என்ற வாசகத்தை இருமுறைக் கூட்டிக்கொள்ளவேண்டும். (இதற்கு "இகாமத்" என்றும் கூறுவர்.)

குறிப்பு:—வடநாட்டில் "இகாமத்"துக்குப்பதிலாகத் "தக்பீர்" என்றும், பதம் மிகுதமாக வழங்கப்படுகிறது. "இகாமத்" மெள்ளச் சொல்லவேண்டும். பாங்கு (அஜான்) உரத்த குரலுடன் சொல்லவேண்டும். எல்லாப் பதங்களையும் இருமுறைக் கூறவேண்டும்.

வினு:— "அஜான்" அல்லது "தக்பீர்" (இகாமத்து) சொல்லக்கூடியவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

விடை:— "அஜான்" கூறுபவர் "முஅஜ்ஜின்" என்றும் (இவ்வரபிச்சொல், பழக்கவழக்கத்தில் கெட்டு மொய்தீன், மொய்தினர், மோதின்சா என்று ஆயுளது) "தக்பீர்" கூறுபவர் "முகப்பிர்" என்றும் அழைக்கப்படுவர்.

14. ஜமா அத் தொழுகை விளக்கம்.

வினு:— பலர் கூடி தொழுகை நிறைவேற்றுவதற்கும், அப்பொழுது தொழுக வைப்பவருக்கும், பின் தொடர்ந்து தொழுபவருக்கும் யாது கூறுவது?

விடை:—பலர் கூடி கூட்டமாகத் தொழுவதற்கு "ஜமா அத்துத் தொழுகை யென்றும்", தொழுக வைப்ப வருக்கு "இமாம்" என்றும், பின் தொடர்ந்து தொழுபவருக்கு "முக்ததீ" என்றும் கூறப்படு கின்றது.

வினா:— தனித்து தொழுபவரை (ஜமா அத்துடனின்றி) யாது கூறுவது?

விடை:— தனித்து தொழுபவரை "முன்பரித்" என்று கூறுவது.

15. மஸ்ஜித் விளக்கம்.

வினா:—ஜமா அத்துடன் தொழுகை நிறைவேற்றுவதற் காகக் கட்டப்படும் பிரத்தியேக ஸ்தலங்களுக்கு யாது பெயர்?

விடை:— "மஸ்ஜித்" (சஜ்தா செய்யும் ஸ்தலம்) என்று பெயர். (இவ்வரபிப் பதம் பழக்க வழக்கத்தில் கெட்டு "மஜித்" என்றும் மசூதி என்றும் உச்சரிக் கப்படுகிறது.)

வினா:— "மஸ்ஜித்" சென்று என்ன செய்யவேண்டும்?

விடை:— மஸ்ஜிதில், தொழுகையை நிறைவேற்றவேண் டும். திருகுர்ஆன் ஓதவேண்டும். "ஜிக்ரு" செய்ய வேண்டும் அல்லது அல்லாஹ்வின் இல்லம் என்ற உள் ளச்சப்பாட்டுடன் பயபக்தியோடு சும்மா உட்காரவேண்டும். மஸ்ஜிதுகளில் விளையாடுவதோ, குதிப்பதோ, உரத்த சப்தமிட்டு பேசுவதோ, குர லெழுப்பி கூக்குரலிடுவதோ, சண்டை சச்சரவுகள் செய்வதோ, கூடாத கருமங்களாகும்.

அத்தியாயம் II.

16. தொழுகை விளக்கம்.

வினு:— தொழுவதினுல் கிட்டும் பயன் என்ன?

விடை:—தொழுவதினுல் கிட்டும் பயன் எண்ணற்றவை. சில பலன்கள்மட்டும் ஈண்டு குறிக்கப்படுகின்றன.

1. தொழுகையுடையவனின் உடை, உடல் சுத்தமாக இருக்கிறது.

2. தொழுகையுடையவன் அல்லாஹ்வின் பொருத்தத்தையும், சந்தோஷத்தையு மடைந்தவனுகிருன்.

3. ஹஜ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் தொழுகையுடையவனைக் கொண்டு மகிழ்ச்சியுற்றவர்களாயும், பொருந்திக்கொண்டவர்களாயு முளர்.

4. அல்லாஹ்வினிடம் தொழுகையுடையவன் புண்ணியவாளுகக் கருதப்படுகின்ருன்.

5. தொழுகையுடையவன் பல பாவங்களைத் தவிர்த்தவனுயிருக்கின்ருன்.

6. தொழுகையுடையோனை, நல்லோர், உலகில் கண்ணியப்படுத்துகின்றனர்.

7. தொழுவோன், மரித்தபின் அல்லாஹ்வினிடத்தில் நித்திய இன்ப சுகத்திற் குரியவனுகிவிடுகின்ருன்.

தொழுகை விபரம் — தொழுகையின் தேவை.

வினு:— தொழுகையில் ஓதவேண்டியவை யாவை? அவைகளின் பெயர், வாசகம் யாவை?

விடை:— தொழுகை ஆரம்பமுதல் முடிவு வரை (சலாம் கொடுக்கும்வரை) ஓதவேண்டியவை, நிறைவேற்ற வேண்டிய முறை கீழ்க்கண்டவாறு:—

1. அல்லாஹு அக்பர் (அல்லாஹு மிகப்பெரியவன்)
2. தனா (புகழ்).

சுப்ஹானக்கல்லாஹும்ம வபிஹம்திக்க வதபாரகஸ்முக்கவத ஆலா ஜத்துக்க வலா இலாஹ கைருக்க.

பொருள்:— "அல்லாஹ்வே நீ பரிசுத்தமானவன். உனது புகழைக்கொண்டு ஆரம்பிக்கிறேன். உன்னுடைய திருநாமம் முபாரக்காயுளது. உனது மஹத்துவம் உன்னதமாகிவிட்டது. உன்னைத்தவிர வேறு நாயன் இல்லை".

தனா முடிந்தபின் "தஅவ்வுது" "தஸ்மிய்யா" ஓத வேண்டும்.

3. தஅவ்வுது

"அவூது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம்"

"விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் நான் அல்லாஹ்விடத்தில் காவல்பாடு தேடுகிறேன்."

4. தஸ்மிய்யா.

"பிஸ்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" அருளாளனும், அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு (ஆரம்பிக்கிறேன்). பின்பு அல்ஹம்து ஸூரத்து ஓதவேண்டும்.

5. ஸூரத்துல் பாத்திஹா.

(அல்ஹம்த் ஷரீப்)

1. அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.
2. அர்ரஹ்மானிர் ரஹீம்.
3. மாலிக்கி யௌமித் தீன்

4. இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தஈன்.
5. இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம்.
6. ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம்.
7. கைரில் ஆமீன் மஃலூபி அலைஹிம் வலல்லால்லீன்.

குறிப்பு:—அல்ஹம்து "ஸூரத்து" ஸூரத்துல் "பாத்திஹா" எனக் கூறப்படுகிறது. இதற்கு ஏழு ஆயத்துகள். அரபி ஆயத்துகளை இவ்வாறு சூரத்து முழுவதுமாக தமிழில் எழுதுவதும், அல்லாஹ்வின் திருவசனங்களின் மஹத்துவத்திற்கு முரணாகும். எனினும், மிகுதமான முஸ்லிம்கள் அரபி தெரியாதவர்களாயிருப்பதால், தொழுகையின் தேவைகளிலாவது, பூர்த்தியடையும் நோக்கத்துடன் அரபி மூலத்தைத் தமிழில் எழுதப்பட்டுள்ளது. அருளும் அனுக்கிரகமிக்க ரஹ்மான் "நிய்யத்தின்" (எண்ணத்தின்) சுத்தியையும், அத்யா ஒவியத்தையும் கருதி, இப்பிழையைப் பொருத்தருள் புரிவானாக. ஆமீன்.

"அல்ஹம்து" ஓதிமுடித்தபின் அடுத்தபடியாக ஏதாவது ஒரு சூரத்து ஓதவேண்டும். கீழே திரு குர்ஆனிலேயே மிகச்சிறிய சூரத்துகளாகக் கருதப்படும் ஐந்து சூரத்துகள் எழுதப்படுகின்றன. அவைகளைச் சீருக வாசிக்கும் முறையையும், அரபி அக்ஷரங்களின், சரியான உச்சரிப்பையும் உள்ளூர் உலமாக்களைக் கொண்டோ, அல்லது அரபி ஓதத் தெரிந்தவர்களைக் கொண்டோ விளங்கிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் சொற்பிழையின் காரணமாக பெரும் அர்த்த பேதங்கள் ஏற்பட சாத்தியமாகும். அரபி அக்ஷரங்களின் சரியான உச்சரிப்புடைய தமிழ் எழுத்துக்கள் கிடையாததால் தமிழின் ஒரு எழுத்தைக்கொண்டு அரபி

யின் மூன்று நான்கு எழுத்துக்களை விளக்கவேண்டியுளது. ஆதலால் இதன் எளிதான முறை உள்ளூர் உலமாக்களிடத்திலோ, அல்லது அரபி தெரிந்தவர்களிடத்திலோ அரபி மூலத்தின் தமிழ் வாசகத்தை ஓதிக்காட்டி, உச்சரிப்புகளைத் தெரிந்து அதன்படி ஓதிவரவேண்டும். இதில் அலட்சியம் செய்வது தொழுகையையே பங்கப்படுத்துவதற்கு ஹேது வாகிவிடும்.

6. சூரத்துல் அசர்.

வல் அஸ்ரி இன்னல் இன்சான லபீ குஸ்ர்,
இல்லல்லதீன ஆமனூ வ.
அமிலுஸ்ஸாலிஹாத்தி
வதவாஸவ் பில்ஹக்கி
வதவாஸவ் பிஸ்ஸப்ர்

சூரத்துல் கௌதர்

1. இன்னா அஃதய்னாகல் கௌதர்.
2. ப சல்லி லிரப்பிக்க வன்ஹர்.
3. இன்ன ஷானிஅக்க ஹுவல் அப்தர்.

சூரத்துல் இக்லாஸ்

1. குல் ஹுவல்லாஹு அஹத்.
2. அல்லாஹுஸ்ஸமத்,
3. லம்யலித்,
4. வலம் யூலத்,
5. வலம் யகுன் லஹு குபுவ்வன் அஹத்.

சூரத்துல் பலக்.

குல் அஊஜு பிரப்பில் பலக் 0 மின் ஷர்ரி மா கலக் 0 வ மின் ஷர்ரி—காசிகின் இதா வகப 0 வ மின் ஷர்ரின் னப்பாசாத்தி பில் உகதி 0 வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத் 0.

ஸூரத்துன்னாஸ்.

குல் அஊது பிரப்பின்னாஸ் 0 மலிகின்னாஸி 0 இலாஹின்னாஸி 0 மின் ஷர்ரில் வஸ்வாஸில் 0 கன்னாஸில்லதீ யுவஸ்விஸு ஃபீ ஸுதூரின்னாஸி 0 மினல் ஜின்னத்தி வன்னாஸ் 0

அல்ஹம்தும், ஒரு ஸூரத்தும் ஓதி முடிந்தபின் — பர்லான நான்கு ரக அத்துடைய தொழுகைகளுக்கு ஆரம்ப இரண்டு ரக அத்தில் அல்ஹம்துடன் ஸூரத்து ஓதவேண்டும். அடுத்த இரண்டு ரக அத்தில் அல்ஹம்து மட்டும் தான் ஓத வேண்டும். ஸூரத்து சேர்க்கலாகாது. இவ்வாறு முன்பரிது (தனித்து) தொழுகும் பொழுது செய்யவேண்டும். இமாம் ஜமா அத்துடன் இமாமைப் பின்பற்றி (முக்ததீயாக த்தொழும் பொழுது கிரா அத்து (அல்ஹம்தோ — ஸூரத்தோ) ஒன்றுமே ஓதக்கூடாது. இமாமைப் பின்தொடர்வதாகவும் இன்னவகதின் தொழுகை என்று நிய்யத்து செய்து அல்லாஹு அக்பர் எனக் கைகட்டி "தனா" ஓதிக் கொள்ள வேண்டும். "ருகூஃ" "சஜ்தா" "கௌமா", உடைய தஸ்பிஹ்களும், அத்த ஹிய்யாத்தும்தான் ஓதலாம். "கிரா அத்து" ஒன்றும் ஓதக்கூடாது. இமாமின் "கிரா அத்தை"க் கேட்ட வண்ணம், அல்லது கிரா அத்து சப்தம் கேட்காவிட்டால் இமாம் கிரா அத்து ஓதுகிறார் என்று ஞாபகத்தில் இருக்கவேண்டும். பின்பு அல்லாஹு அக்பர் என்று ருகூஃ செய்யவேண்டும்.

7. ருகூஃவுடைய தஸ்பீஹ்.

"ஸுப்ஹான ரப்பியல் அலீம்" (மூன்று தடவை ஐந்து தடவை அல்லது எழு தடவை இந்த "தஸ்பீஹ்"

சொல்லவேண்டும்.) "மஹத்துவமிக்க எனது ரப்பு தூய்மையானவன் என்பது பொருள்."

8. கௌமாவுடைய தஸ்பீஹ்.

(தஸ்மீஉ)

"ஸமி அல்லாஹுலிமன் ஹமி தஹ்" - எனக் கூறி நிலைக்கு வரவேண்டும். இதன் பொருள், "அல்லாஹ்வை எவன் புகழ்ந்தானோ அவனை, அல்லாஹ் கேட்டுக் கொண்டான்."

9. கௌமாவுடைய தஹ்மீத்.

இவ்வாறு நிலைக்கு வந்தவுடன் ஒரு தடவை

"ரப்பனா வலக்கல் ஹம்து"

என்றோ, அல்லது

"அல்லாஹும்ம ரப்பனா வலக்கல் ஹம்த்"

என்றோ, அல்லது

"அல்லாஹும்ம ரப்பனா லக்கல் ஹம்த்" என்றோ கூறவேண்டும். இதன் பொருள் அல்லாஹ்வே! எங்கள் நாயனே! உன்னையே புகழ்கின்றோம். உனக்கே சர்வ புகழும் உரித்தாகுக என்பது. இதன் பின் அல்லாஹு அக்பர் எனச் சொல்லியவண்ணம், . "ஸுஜூது" செய்யவேண்டும்.

10. ஸஜ்தாவின் தஸ்பீஹ்.

(பூமியின்பேரில் நெற்றி படும்படி தலை வைத்தல்)

'தஸ்பீஹ்.

"ஸுப்ஹானரப்பியல் அஃலா" —"மிக்க உயர்வான என்னுடைய ரப்பு, ரொம்பவும் தூய்மையானவன்" என்பது இதன் பொருள்.

மூன்று, ஐந்து அல்லது எழுதடவை கூறலாம். பின் "ஸஜ்தா"விலிருந்து தலை உயர்த்தி ஒரு தஸ்பீஹ் உடைய அளவாவது சிறு இருப்பில் இருக்கவேண்டும். இதன் பெயர் ஜல்சா என்பது.

இதில் தஸ்பிஹ் ஒன்றும் கிடையாது. பின் இரண்டாவது ஸஜ்தா செய்து அதே "தஸ்பீஹ்" ஒதி இரண்டாவது ரக அத்திற்கு எழுந்து நின்று முதல் ரக அத்தைப் போலவே, அல்ஹம்து, சூரத்து, ருகூஃ, ருகூஃ உடைய தஸ்பீஹ், தஸ்மீஉ, அதன் தஸ்பிஹ், பின் ஸஜ்தா, அதன் தஸ்பீஹ், பின் சிரு இருப்பு, பின் இரண்டாவது ஸஜ்தா, அதன் தஸ்பீஹ் ஒதி முடிந்தபின், இரண்டாவது ரக அத்தின், இரண்டாவது ஸஜ்தாவை விட்டு தலை உயர்த்தி உட்கார்ந்து, இரண்டுரக அத்து தொழுகையாக யிருந்தால் அத்த ஹிய்யாத்து தருதே, இப்ராஹீம், மாசூரா, (முழு அத்த ஹிய்யாத்து) இம்மூன்றும் ஒதி முடித்து, "சலாம்" கொடுத்துவிடவேண்டும்.

மூன்று ரக அத் தொழுகையாக இருந்தால் இரண்டாவது ரக அத்தில் (அத்த ஹிய்யாத்து எனக் கூறப் படும்) "தஷஹ்ஹுத்" ஒதி முடிந்த பின், எழுந்து நின்று மூன்ருவது ரக அத்தை நிறைவேற்றி இரண்டாவது ஸஜ்தா செய்தபின் உட்கார்ந்து (கடைசி இருப்பு) முழு "அத்தஹிய்யாத்து" ஒதி சலாம் கொடுத்து விட வேண்டும். "அத்தஹ்ய்யாத்து," தருதே இப்ராஹீம், மாதுரா ஆக மூன்றும் முழு அத்திஹியாத்து எனக் கூறப்படும்.

நான்கு ரக அத்து தொழுகையாக இருந்தால் இரண்டு ரக அத் முடிந்த பின் (அத்த ஹிய்யாத்து என்றும்

கூறப்படுகிறது.) "தஷஹ்ஹுத்" ஓதி எழுந்து மூன்ருவது, நான்காவது ரக அத்துக்களை நிறைவேற்றி நான்காவது ரக அத்தின் இரண்டாவது "ஸஜ்தா"வை முடித்து "அல்லாஹு அக்பர்" என தலையுயர்த்தி உட்கார்ந்து "முழு அத்த ஹிய்யாத்து" ஓதி (தஷஹ்ஹுத் தருதே இப்ராஹிம், துஆ மாதூரா) சலாம் கொடுத்து தொழுகையை முடித்துக்கொள்ளவேண்டும்.

முக்கிய குறிப்புகள்:— (மஸ்அலாக்கள்)

1. பர்லான தொழுகைகளில் மஃரிபுபர்ளுமட்டும் தான் முன்றுரக அத்துடையது. "வாஜிபு வித்ரு" மூன்று ரக அத்துடையதாயுளது. மீதி எந்த "நபிலும், சுன்னத்தும்" மூன்று ரக அத்துடையதாக ஆதார பூர்வமாகத் தெரியவில்லை.

2. சுப்ஹுடைய பர்ளுமட்டும் இரண்டுரகஅத்து மீதி ளுஹர், அசர், இஷாவுடைய பர்ளுகள் நான்குரக அத்துடையவை.

3. மூன்றுரக அத்துடைய ஸுன்னத்தோ, நபில் தொழுகைகளோ கிடையாது. நான்குரக அத்துடையவைகளாகவும் இரண்டுரக அத்துடையவைகளாகவுமுள.

4. இமாமைப் பின் தொடர்ந்து தொழுகும் பர்லான எல்லாத் தொழுகைகளிலும் முக்ததீக்கு (ஹனபிமது ஹபின்படி) "கிரா அத்" (அல்ஹம்தோலம்முசூரத்தோ) கிடையாது. இமாமின் "கிரா அத்தே" முக்ததியுடைய கிரா அத்திற்குப் பகராகக் கருதப்படுகிறது.

5. இமாமைப் பின் தொடராமல் தனித்து (முன்பரிதாக) தொழுகும் பர்லான தொழுகைகளில் முந்தின

இரண்டுரக அத்துகளில்தான் அல்ஹம்து சூரத்துடன் இதர சூரத்துகளில் ஒன்று ஓதவேண்டும். இதற்கு "லம்மு சூரத்து" என்று கூறப்படும். கடைசி இரண்டுரக அத்துகளில் (அதாவது தஷஹ்ஹுது க்குபின்—எழுந்து நிலைக்கு வந்து தொழுகும் மூன்ருவது, நான்காவது ரக அத்துகளில்) "அல்ஹம்து" மட்டும் ஓதவேண்டும். லம்மு சூரத்து கிடையாது.

6. மேற்கூறிய "விதி" தனித்துத் தொழுகும் பர்லான மூன்று, நான்கு ரக அத்து தொழுகைகளுக்குத் தான் ('மஃரிப்' லுஹர், அசர் இஷா) — சுப்ஹு தொழுகை யில் இந்த பிரச்னையில்லை. ஏனெனில் இது இரண்டு ரக அத்துடையது. சுன்னத்து நபிலான தொழுகைகளின் நான்குரக அத்துகளிலும் "அல்ஹம்துடன்" இதர சூரத்துகளை "லம்மு" (சேர்க்க) செய்யவேண்டும்.

11. அத்தஹிய்யாத்து. ("தஷஹ்ஹுத்")

அத்தஹிய்யாத்து — லில்லாஹி — வஸ்ஸலவாத்து — வத்தய்யிபாத்து, — அஸ்ஸலாமு அலைக்க — அய்யு ஹன்னபிய்யு — வரஹ்மதுல்லாஹி — வ — பரகாத்து ஹு — அஸ்ஸலாமு — அலைனு — வ — அலா — இபாதில்லாஹி — ஸ்ஸாலிஹீன் — அஷ்ஹது அன்லாயி லாஹ — இல்லல்லாஹு — வஅஷ்ஹது — அன்ன — முஹம்மதன் — அப்துஹு — வரசூலுஹு. இதுவரை "அத்தஹிய்யாத்து" என்றும் "தஷஹ்ஹுத்" என்றும் சொல்லப்படும். இதுவரைத்தான் நடு இருப்பில் (இரண்டு ரக அத்துக்குப்பின் உட்காருவதில்) மூன்றுரக அத்து அல்லது நான்குரக அத்துடைய தொழுகைகளில் ஓத வேண்டும். கடைசி இருப்பில், மேற்கண்ட அத்தஹிய்

112949

யாத்துடன் கீழ்க்கண்ட தருதே இப்ராஹிம், துஆமா தூரா ஓதிமுடித்து சலாம் சொல்லவேண்டும்.

தருதே இப்ராஹிம். (அலைஹி)

அல்லாஹு¬ம்ம—ஸல்லி —அலா — முஹம்மதின் — வ அலா ஆலி — முஹம்மதின் — கமா — ஸல்லய்த்த — அலா — இப்ராஹீம — வ அலா — ஆலி — இப்ராஹீம — இன்னக்க ஹமீதுன் — மஜீத் — அல்லாஹு¬ம்ம — பாரிக் — அலா — முஹம்மதின் — வ — அலா — ஆலி — முஹம்மதின் — கமா — பாரக்த — அலா — இப்ராஹீம — வ — அலா — ஆலி — இப்ராஹீம இன்னக்க — ஹமிதுன் — மஜீத்

துஆ மாதூரா.

அல்லாஹு¬ம்மஃக பிர்லீ — வ— லி — வாலிதய்ய — வ — லி உஸ்தாதி — வ — லி — ஜமீஇல் — முஃமினீன — வல் — முஃமினுத் — வல் — முஸ்லிமீன — வல் முஸ்லிமாத் — அல் — அஹ்யாஇ மின்ஹு¬ம் — வல் — அம்வாத் — இன்னக்க — முஜி புத்தஅ வாத் — பிரஹ்மத்திக்க — யா அர்ஹமர் ராஹிமீன்.

கீழ்க்கண்ட துஆவையும் சேர்த்து ஓதிக்கொள்வது நல்லது.

"ரப்பனு—ஆத்தினு — பித்துன்யா — ஹஸனத்தன் வ — பில் ஆகிரத்தி — ஹசனத்தன் வ — கினு — அதா பன்னர்".

இவ்விரு துஆக்களையும் ஓதி முடித்தபின் "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்" எனக் கூறிக் கொண்டே வலதுபக்கம் முகம்திருப்பி சலாம் கொடுக்க

வேண்டும். பின் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ் எனக்கூறியவண்ணம் இடது பக்கம் முகம் திருப்பி சலாம் கொடுக்கவேண்டும்.

இதன் பொருள் "அல்லாஹ்வின் ரஹ்மத்தும் (கிருபாகடாக்ஷமும்) சாந்தியும் உங்கள்பேரில் உண்டாவதாக" என்பது.

சலாம் கொடுக்கையில் (முன்பரிதாக) தனித்துத் தொழுபவராயிருந்தால், வல இடப்புறத்து மலக்குகளை நிய்யத்து செய்துகொள்ளவேண்டும். "முக்ததி" யாக (இமாமைப் பின்பற்றியவராக) யிருந்தால் வலது இடப் புறத்து மலக்குகளையும், ஜமாத்தினரையும், இமாமை யும் நிய்யத்து செய்துகொள்ளவேண்டும்.

குறிப்பு:— தனித்து தொழுகையில் சலாம் கொடுக் கும் பொழுது தன் வல, இடப்புற மலக்குகளை-நிய்யத்து செய்துகொள்ளவேண்டும். இமாம் ஜமாஅத்துடன் தொழுதால், தனது வல, இடப்புற மலக்குகள், இமாம், இதர ஜமாஅத்தினர் யாவரின் நிய்யத்தும் செய்து கொள்ளவேண்டும். இத்துடன் தொழுகும் முறை முடிவு பெறுகிறது.

சலாம் கொடுத்தபின் துஆ கேட்கவேண்டும். அதற்கு சுருக்கமான துஆக்கள் பாடமாக்கிக்கொள்ள வேண்டும். பரலான தொழுகைகளுக்குப்பின் மிகுத மாக ஓதப்படும் ஹதிதுகளில் வந்துள்ள சுருக்கமான துஆ கீழே குறிக்கப்படுகிறது:—

"அல்லாஹும்ம — அன்தஸ்ஸலாம் — வ— மின்க — ஸ்ஸலாம் — தபாரக்த — யாஜல் — ஜலாலி — வல் இக்ராம்".

இத்துடன் தொழுகையில் ஓத வேண்டியவை யாவும் முடிந்தபோதிலும், வித்ருவாஜிபில் மூன்ருவது ரகஅத்தில் அல்ஹம்துக்குப்பின் லம்மு சூராத்து ஓதி, ருகூஃ செய்வதற்கு முன்பதாக, இரு கைகளையும் செவி வரை அல்லாஹு அக்பர் என உயர்த்தி தக்பீர் கட்டி குனூத்து துஆ ஓதவேண்டும். ஓதி முடித்தபின் ருகூஃ வுக்குச் செல்லவேண்டும்.

குனூத்துடைய துஆ.

அல்லாஹும்ம—இன்னு—நஸ்தயீனுக்க—வநஸ்தக் பிருக்க—வ — நுஃமினு — பிக்க—வ — நதவக்கலு — அலேக்க — வ — நுஸ்னீ — அலேக்கல் — கைர் — வ — நஷ்குருக்க — வ — நக்லஉ — வ — நத்ருக்கு — மன் — யப்ஜுருக்க—அல்லாஹும்ம—இய்யாக்க—நஃபுது —வலக்க — நுசல்லீ — வ —நஸ்ஜுது — வ இலேக்க — நஸ்ஆ — வ — நஹ்பிது — வ — நர்ஜூ — ரஹ்மத்தக்க — வ — நக்ஷா — அஜாபக்க — இன்ன — அஜாபக்க — பில் — குப்பாரி — முல்ஹிக்.

இத்துடன் தொழுகையின் முறையும், தொழுகையில் ஓதவேண்டிய யாவும் பூர்த்தியாகின்றன. ஒரு முஸ்லிம் இவற்றைப் பாடமாக்கி, இம்முறைப்படி தொழுக ஆரம்பித்தானேயானல் இஸ்லாமின் அஸ்திபாரக்கடமையையும், அடியானின் மாபெரும் பொருப்பையும் நிறைவேற்றத் தகுதியுள்ளவனுக ஆகிவிடுகின்ருன்.

அத்தியாயம் III.

தொழுகையின் முறையும், அதில் ஓதவேண்டிய வைகளும் சவிஸ்தாரமாக விளக்கப்பட்ட போதிலும், தொழுவதற்கு முன்பாக அனுஷ்டிக்கவேண்டிய சில அம்சங்கள் உள. எவ்வாறு ஒரு ராஜனுடைய தர்பாருக்கோ, அல்லது அரசாங்க அதிகாரிகளைக் காணுவதற்கோ, யத்தனிப்போமேயானல் அதற்குரிய அத்யாவசியங்களைப் பூர்த்திசெய்து கொள்ளுகின்றோமோ, தகுதியற்றவர்களாயிருப்பினும், தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்கின்றோமோ, அவ்வாறே, ராஜாதிராஜனும், சர்வாதிகாரியும், சர்வலோக இரட்சகனுமாகிய அல்லாஹ் ஜல்ல ஷானஹூவத ஆலாவுடைய திருச்சந்நிதானத்தை அணுகுவதற்கு முன்பதாக, அருகதையற்ற நாம், அருகதையுள்ளவர்களாக ஆக்கிக் கொள்வான்வேண்டி சில அத்யாவசிய அம்சங்களை அனுஷ்டித்தாகவேண்டும். அவ்வம்சங்களை "ஷரத்துகள்", நிபந்தனைகள் எனக் கூறப்படும். முதன் முதலாக உடல், உடை, இவ்விரண்டும் தூய்மையான நிலையில் இருப்பது, உலக மேதைகளைக் காண்பதிலும், அத்யாவசியமாகக் கருதப்படுவது போல் இறைவனுடைய சந்நிதானத்தை அணுகுவதற்கும் உடற்சுத்தம் உடைச்சுத்தமும் நிபந்தனைகளாயுள. பெருந்தொடக்கு, சிறுதொடக்கு இவைகளை விட்டு உடலைத் துப்புரவாக்கிக் கொள்ளவேண்டும். "குஸ்லு" (தலை முழுக்கு, ஸ்நானம்) சில விஷேச முறைகளுக்குட்பட்டு செய்வதின் காரணமாக பெருந் தொடக்கைவிட்டு, உடல் தூய்மையாகும். சிறுதொடக்கு "ஒளு" செய்வதைக் கொண்டு நீங்கும். மேற்கூறப்பட்ட குஸ்லு, தயமமும், செய்வதற்குரிய

தண்ணீர் கிடைக்காமலிருந்தாலும், அல்லது தண்ணீர் உபயோகிப்பதால் வியாதி அதிகரிக்குமென்ற பயம் இருந்தாலும், இருவகைப்பட்ட தொடக்குகளை விட்டு நீங்க "தயமமும்" செய்துகொள்ள, "இஸ்லாம்" அனுமதித்துள்ளது. ஆகவே இவைகளை விபரமாக ஆராய்வோம்.

2. அர்கானுல் இஸ்லாம்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் பர்லுகளில், முதல்பர்லு (முதல் கடமை) "ஷஹாதத்துகலிமா" ஓதி அதன் கருத்துகளை அறிந்து, அதன் பேரில் உறுதிகொள்ளுதல். இவ்வைந்து பர்லுகளையும் "அர்கானுல் இஸ்லாம்" (இஸ்லாத்தின் தூண்கள்) என்றும் கூறப்படும். இதுவரை இந்த கலிமாக்களைப்பற்றியும், அதன் விளக்கங்களையும், ஈமானின் அம்சங்களையும் ஆராய்ந்தோம். இனி அடுத்த ருகுன் தொழுகையாகும்.

அர்கானுல் இஸ்லாம் (இஸ்லாமின் தூண்கள்)

ஐங்கடமைகள்.

1. கலிமா தய்யிபு, ஷஹாதத்து கலிமா, நாவினால் கூறி அதன் பொருளை அறிந்து, கல்பைக் கொண்டு உறுதி கொள்ளுதல்.
2. பிரதி தினமும் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றி வைத்தல்.
3. ரமலான் மாதத்தின் பகற்காலங்களில் நோன்பு நோர்த்தல்.
4. ஜக்காத்து கொடுத்தல்.

5. பொருள் வசதியும், பிரயாணத்திற்குச் சக்தியும் உள்ளவர்கள் திருமக்கா சென்று ஆயுளில் ஒரு முறை "ஹஜ்ஜு" செய்தல்.

இவை யாவும் இஸ்லாத்தின் பர்ளுகளாகும். முதல் பரலின் விளக்கம், ஈமான், அகாயித் (கொள்கை)களின் விளக்கமாகும். இரண்டாவது பர்ளு தொழுகை, தொழுகையின் ஷரத்துக்களை (நிபந்தனைகளை) வெளி பர்ளுகள் என்றும், ருக்னுகளை உள் பர்ளுகள் என்றும் கூறப்படும்.

3. தொழுகையின் ஷரத்துகள் (வெளி பர்லுகள்)

1. தொழுகைக்குரிய காலத்தையறிதல் ('வக்து' அறிந்து தொழுதல்)
2. உடற்சுத்தம்
3. உடைச்சுத்தம்
4. இடச் சுத்தம்
5. "சத்ரு" (மறைக்கவேண்டிய இடங்களை) மறைத்தல்
6. கிப்லாவை முன்நோக்குதல்

4. நிய்யத்து செய்தல்

மனதில் இன்ன வக்துடைய பர்ளு என்பதை எண்ணவேண்டும் (நாவினால் கூறுவது சுன்னத்தாகும்.)

5. நஜாசத்து-தஹாரத்து-குஸ்லு

தொழுகையின் இரண்டாவது ஷரத்து (வெளி பர்ளு) உடற்சுத்தமாகும். (தஹாரத்து) தொழுகைக்காக உடற்சுத்தம் செய்வதென்பது யாது? சரீரத்தை

"நஜாசத்தை" விட்டும் சுத்தமாக வைத்துக்கொள்ளு தலும் ஒளூ செய்துகொள்வதுமாகும். நஜாசத்து (அசுத்தம் — அசங்கிதம்) என்பது நஜாசத்தே ஹகீகீ நஜாசத்தே மஃனவீ என இருவகைப்படும். புற அசுத் தங்களை ஜலத்தைக்கொண்டு சுத்தம் செய்யவேண்டும். தண்ணீர் கிடைக்காவிடில் மண்ணைக்கொண்டு சில நிபந் தனைக்குட்பட்டு, சுத்தம் செய்யவேண்டும். இதற்கு தயம்மும் என்று பெயர். ஜலத்தைக்கொண்டு அசுத்தத் தை நீக்கி திரேக சுத்தம் செய்வதில் குஸ்ல் (ஸ்நாநம்) ஒன்றாகும். இது உடம்பில் உள்ள அழுக்குகளைப் போக்கி உடலைச் சுத்தப்படுத்தி ஆரோக்கியமாக இருப் பதற்குமட்டுமல்ல. "இஸ்லாம்" குசுல் செய்வதின் அவசியம், முறை, தருணங்கள் இவைகளை விவரித்து "குசுல்" செய்துகொள்வதை சில சந்தர்ப்பங்களில் பர்லாக்கி (கடமை) யுள்ளது. ஏழு வகைப்பட்ட சந்தர்ப் பங்களில் குஸ்லு செய்வது கடமை (பர்ல்) யாகும். இதைப் பெருந் தொடக்கு என்றும் கூறப்படும்.

இந்திரியம் (மனி) வெளியாகுதல், (காம உணர்ச் சியைக் கொண்டு வெளியாகுதல்) இஹ்திலாம் (சொப் பனம்) ஆண் பெண் புணர்ச்சி—(ஜனபத்)—முஷ்டிப்பிர யோகம்—(ஜ-ல்க்)— "விலாதத்"—ஆண்குறியில் இந்திரிய ஈரத்தை மர்மஸ்தானத்தில் காணல்—மாதாந்திர ருது— பிரசவ ருது முதலியன. இவ்வகைப்பட்ட அசங்கிதங் களிலிருந்து ஸ்நானம் செய்து சுத்தமாவது "குஸ்லு" எனக்கூறப்படும். இந்த "குஸ்லு" அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஷரீயத்தில் ஒப்புக்கொள்ளப் படக்கூடிய "நிலை" அடைவதற்கு நிர்ணயிக்கப் பட்ட முறையிருக்கிறது. அம்முறை தவறினால், தொழுகையில்

இறைவன் சந்நிதானத்தை அணுகுவதற்கு அருகதை உள்ளவர்களாகக் கருதப்படமாட்டாது. ஆகவே அம்முறைகளை குஸ்லின் (முழுக்கின்) பர்ளுகள் என்று கூறப்படும்.

6. முழுக்கின் (குஸ்லின்) பர்ளுகள் 3

1. வாய் கொப்பளித்தல்.
2. நாசிக்கு நீர் செலுத்துதல்.
3. உடல் முழுவதும் (ஒரு ரோமக்காலளவும் தவிர்த்து விடாதபடி) நனைத்தல் இவைகளில் ஒன்று தவறினும் மயிர்க்காம்பளவு நனையாதபடி விடப்பட்டாலும் குஸ்லு கூடாது. "குஸ்லு" கூடாவிட்டால் தொழுகை கூடாது.

7. ஒளூ-தயம்மும்

மேல் விவரிக்கப்பட்ட அசங்கிதங்களை விட்டு குஸ்லு செய்வது அவசியமாயின் குஸ்லு நிறைவேற்றி, உடற் சுத்தியடைந்து, தொழுகைக்காக வேண்டி ஒளூவும் செய்துகொள்ளவேண்டும். 'குஸ்லு' செய்யக் கடமைப் பட்டவராயில்லா விட்டாலும், தொழுகைக் காகவேண்டி "ஒளூ" செய்துகொள்வது கடமையாகும். "ஒளூ"வின்றி தொழுகை நிறைவேறாது. ஆகவே ஒளூ வைப்பற்றி தெரிந்துகொள்ளவேண்டும்.

8. ஒளூவின் பர்ளுகள் 4

1. முகம் முழுவதையும் ஒரு முறை கழுவுதல் (அதாவது நெற்றியின் ரோமங்களிலிருந்து முகத்தின் கீழ்பாகம் நாடிக்குழி வரையிலும்; வலது காதின் சிறு

சோனையிலிருந்து இடது காதின் சிறு சோனை வரையி லும் கழுவிக்கொள்வதாகும்.)

2. முழங்கை மொழியுட்பட இரண்டு கைகளையும் ஒரு முறை கழுவுதல்.

3. இரண்டு கால்களையும் கரண்டை மொழியுட்படக் கழுவுதல்.

4. சிரசில் நான்கில் ஒரு பாகத்தை "மஸஹ்" செய்தல். (கையை தண்ணீரில் நனைத்து தடவுதல்) இவைகளில் தவறினாலும், மயிர்க்காம்பு அளவு விடப்பட்டாலும் "ஒளு" கூடாது.

தண்ணீர் கிடைக்காவிட்டால் சில விசேஷ நிபந் தனைக்குட்பட்டு மண்ணினால் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். இதற்குத் "தயம்மும்" என்று கூறப்படும். "தயம்மும்" முந்தின உம்மத்துக்களுக்கு அருளப்பட வில்லை. இந்த உம்மத்திற்காக இலேசாக்கப்பட்ட பல சன்மார்க்கக் கடமைகளில் இந்தத் தயம்மும் ஒன்றாகும். இந்த உம்மத்தின் விசேஷ பாக்கியங்களில் இதுவும் ஒன்றாகும்.

9. தயம்முமின் பர்லுகள் 3

1. தொழுகைக்காக தயம்மும் செய்கிறேன் என நிய்யத்து செய்வது.
2. கையை சுத்தமான மண்ணில் அடித்து முகத்தில் தடவிக்கொள்ளுதல். முழங்கை உட்பட தடவிக் கொள்ளுதல். தயம்முமின் பர்லு ஆறாகவும் கணிக்கப்பட்டுள்ளது.
3. விரலால் அல்லது பல விரல்களால் தடவுதல்.

4. மண் சுத்தமாயிருத்தல்.
5 மண், அல்லது மண் இனத்தைச் சேர்ந்தவைகளை உபயோகித்தல்.
6. ஜலமில்லாமல், அல்லது ஜலமிருந்தும் ஜலத்தை உபயோகிக்க இயலாமல் இருத்தல்.

10. தொழுகையின் ரகா அத்து விபரம்.

சுப்ஹ் தொழுகை:—	சுன்னத்து 2. பர்லு 2.
லுஹர் தொழுகை:—	சுன்னத்து 4 பர்லு 4. சுன்னத்து 2. நபில் 4.
அசர் தொழுகை:—	சுன்னத்து 4. பர்லு 4.
மக்ரிப் தொழுகை:—	பர்லு 3. சுன்னத்து 2. நபில் 2,
இஷாத் தொழுகை:—	சுன்னத்து 4. பர்லு 4. சுன்னத்து 2. நபில் 2. வித்ருவாஜிபு 3.
ஜூம்ஆ 2 தொழுகை:—	சுன்னத்து 4. பர்லு 2. சுன்னத்து 4. பின் சுன்னத்து 2. நபில் 2.
ஈத்பெருநாள் தொழுகை:—	ஈதுல் பித்ருவாஜிபு 2 ஈதுல் அல்ஹா வாஜிபு 2.

குறிப்பு:- பிரதி இரவு பகலும் பர்லான ரகாத்துகள் 17. ஜும் ஆதினம் மட்டும், லுஹர் தொழுகை தொழுகப் படமாட்டாது. பர்லு 4க்கு பதிலாக ஜும்ஆவின் பர்லு இரண்டு உள்ளது. இதர சுன்னத்துகளும் தொழுக வேண்டும். ஜும் ஆவுடைய தொழுகையை இமாம் ஜமா அத்துடன் அடையாதவர்கள் தனித்து "லுஹர்" தொழுதுகொள்ள வேண்டும்.

தொழுகையின் நிய்யத்து செய்வது ஷரத்துகளில் (வெளிபர்லுகளில்) ஒன்று நாவினல் கூறவேண்டுமென்பது சுன்னத்து. இந்த வக்தின் தொழுகை என்பதை எண்ணத்தில் நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் "நபில்", வாஜிபு, "சுன்னத்து" தொழுகைகளிலும் இன்ன இன்ன தொழுகை என நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

பிரிவு II

இஸ்லாத்தின் கடமைகள் 130.

இஸ்லாத்தின் கடமைகள் 130 ஆக (ஹனபிமதுஹபுப்படி) சிலர் கணித்துள்ளனர். விபரம் பின்வருமாறு.

இஸ்லாத்தின் பர்லுகள்	5.
ஐங்காலத் தொழுகை	5.
ஐங்கால நிய்யத்து	5.

நாயகத்தின் நான்கு தலைமுறைகளை அறிவது முஹம்மத் முஸ்தபா (ஸல்) பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் பின் அப்துல் முனப் ஆக தலைமுறை 4.

''ஒளூ''வின் பர்ளுகள்	4	
மதுஹபுகள்	4	
முழுக்கின் பர்ளுகள்	3	
தயம்முமின் பர்ளுகள்	3	
ரமலான் முப்பது நோம்புகளும் முப்பது நாட்களின் நிய்யத்து	30	60
ஈமானின் பர்ளுகள்	7	
ஈமான் பர்ளுகள்	7	

அல்லாஹ்மீதும், அவன் மலக்குகள் மீதும், அவன் வேதங்கள் மீதும், அவன் தூதர்கள் மீதும், இறுதி நாளின்பேரிலும் நன்மை, தீமை அல்லாஹ்வினுல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதின் பேரிலும், கியாமநாளில் உயிர்ப்பிக்கப்படுவதின் பேரிலும் விசுவாசங்கொள்ளல் 7.

தொழுகையில் உள்வெளி பர்ளுகள் அல்லது ஷாத்துகள்	13
ஒரு நாள் தொழுகையின் பர்லான ரகஅத்துகள்	17
ஆக மொத்தம்	130

பிரிவு 12
இமாம் ஜமா அத்து தொழுகை.

ஐங்காலத் தொழுகை பர்லாக்கப்பட்டு அவைகளை (பர்லான தொழுகைகளை) ஜமா அத்துடன் (இமாமைப் பின்தொடர்ந்து) நிறைவேற்றுவது நபிபெருமானார் (ஸல்) அவர்களின் கடுமையாக வற்புறுத்தப்பட்ட சுன்னத்துக்களில் ஒன்றாகும் (சுன்னுல் ஹுதா)–ஹனபீமதுஹபுப்படி ஜமா அத்தை 'வாஜீபாக' நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜமா அத்தை விடுவது வாஜிபை விட்டதற்கொப்பாகும்.

ஹதீதுகள்

தனித்து தொழுவதைவிட ஜமா அத்துடன் தொழுவதில் 27 மடங்கு அதிகப்பலன் உண்டென, நபிகள் பிரான் (ஸல்) நவின்றுள்ளனர். இமாம் ஜமா அத்திற்கு குறைந்தது ஒரு இமாம், ஒரு மாமூம் (முக்ததீ—பின் தொடர்பவர்) ஆக இருவர் மொத்தத்தில் வேண்டும். பாங்கு சப்தம் கேட்டு, தொழுகைக்கு மஸ்ஜிதுக்கு வராமல் தனித்து தொழுபவனுடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை எனப்பெருமானர் (ஸல்) பகர்ந்து உள்ளனர்.

ஹஜரத் அப்துல்லாஹ் இப்னு உம்மிமக்தூம் (ரலி) அவர்கள் குருடராயிருந்தும், ஜமா அத்தைத் தவிர்ப்பதற்கு உத்திரவு கேட்டு, முதலில் அனுமதிக்கப்பட்டு பின் பாங்கு சப்தம் காதில் விழுகிறதென்பதைக்கேட்டுத் தெரிந்தப் பெருமானர் (ஸல்) "அப்படியானல், நீர் ஜமா அத்தைத் தவிர்க்கமுடியாதென" மறுத்துவிட்டனர். ஒரு குருடரான சஹாபிக்கும் ஜமா அத்தைத் தவிர்க்க உத்திரவு கிடைக்க வில்லையானல் நாம் எத்துணை சில்லுண்டி காரணங்களுக்கெல்லாம் இன்று ஜமா அத்தைத் தவிர்க்கின்ரேம் என்பதை சிந்திக்கவேண்டும்.

"எனக்கு பெண்கள் பிள்ளைகளுடைய பயம் இல்லாவிட்டால், இகாமத்து சொல்லி இமாம் ஜமா அத்து நடத்த உத்திரவு செய்து, யார் யார் ஜமா அத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதைத்தெரிந்து, அவர்களின் வீடுகளை, இவ்விரகுக்கட்டுகளினல் (இதற்காகவேண்டியே உத்திரவிட்டு சேகரம் செய்யப்பட்டது) கொளுத்தி விடுவேன்" எனப் பெருமானர் (ஸல்) ஜமா அத்துவிட்ட

வர்களுடைய விஷயத்தில் கடுங்கோபமாகக் கூறியுள்ளனர். அறிவுடையோருக்கு இந்த எச்சரிக்கையே போதுமானது.

"ஜும்ஆ"விலும், ஈதுகள் இரண்டிலும், இமாம் ஜமா அத்துடன் தொழுவது ஷரத்து. தனித்த ஜும்ஆ தொழுகையோ, ஈது தொழுகையோ கிடையாது. ஜமா அத் தொழுகைகளில் சப்புகளை சீர்திருத்துவதும் பெரிய சுன்னத்தாகும். இடைவழியின்றி அடைத்து, நெருக்கமாக முன்பின்னில்லாமல் அணிவகுத்து நிற்கவேண்டும். ஆரம்பத்தில் இமாமைப் பின் தொடரமுடியாவிட்டால் எந்த ரகத்திலும் பின் தொடர்ந்துகொள்ளலாம். இவை சம்பந்தப்பட்ட மஸ்லாக்களை விபரமான கிதாபுகளிலோ அல்லது நமது கிதாபு "சன்மார்க்க போதினியிலோ" பார்த்துக்கொள்ளவும்.

பிரிவு 13.

பிரயாணியின் கஸ்(ரு) தொழுகை.

"முகீம்" என்பது உள்ளூர் வாசி. "முசாபிர்" என்பது பிரயாணி. தனது இருப்பிடத்தை விட்டு, பிரயாணமாக 64 மைலுக்கப்பாலுள்ள இடத்திற்குப் பயணமாகிப் புறப்பட்டு, தனது ஊர் எல்லையைக் கடந்துவிட்டானேயானால், அவன் பர்லான நான்கு ரக அத்துத் தொழுகையை கஸ்ராக இரண்டு ரக அத்து தொழுக வேணடும். மூன்று ரக அத் பர்லுக்கு (மஃரிபு) கஸ்ரு கிடையாது. (சுபஹ்) இரண்டு ரக அத்தானதால், அதற்கும் "கஸ்ரு" இல்லை. ஆனால் ஒரு முசாபிர் மேற் கூறப்பட்ட தூரத்திலுள்ள ஊ ரின் "முகீமான" இமாமைப் பின்தொடர்ந்து. (நான்கு) ரக அத்தாக தொழுதுகொள்ளலாம்.

Q7
N56

முடிவுரை.

துஆ.

சர்வ வல்லோனாகிய அல்லாஹ்வே! புகழனைத்தும் உனக்கே உரித்தாகுக! நினது திருநாமம் உன்னதமாகுக! நினது திருச்சித்தத்தையும், திருப்பொருத்தத்தையும் மனு குலத்தின் இம்மையின் லட்சியமாக ஆக்கி அருள்புரிவாயாக! நினது நீதி நெறியை வையகத்தே வாழும் மாந்தரிடையே நிலை நிறுத்தி வைப்பாயாக! நினது "திருமொழியை" உயர்த்தி யருள்புரிவாயாக! "உம்மத்திடையே" உம்மி ரசூல்(ஸல்) அவர்களின் உச்ச ஒழுக்கங்களையும், உன்னத நடைமுறைகளையும் உயிர்ப்பித்தருள்புரிவாயாக! இவ்வெளியோனின், இச்சிறு முயற்சியை அங்கீகரித் தருள்புரிவாயாக! இவ்வெளியீட்டை, முஸ்லிம்களிடையே, சன்மார்க்க ஞானம் பரவுதற்குரிய ஆதாரமாக ஆக்கி அருள்புரிவாயாக! இவ்வருகதை யற்றவனை நினது இகபர பாக்கியங்களுக்கும், அருட் கொடைகளுக்கும் ஆளாக்கி இப்புனித கைங்கரியத்தில் ஊக்கம், விடா முயர்ச்சியுடன் ஈடுபடுவதற்குரிய அறிவு, ஆற்றல், ஆயுள், தரிபாடு யாவும் தந்தருட்புரிவாயாக!.

ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன். பிஹுர்மத்தி ஸய்யதில் முர்ஸலீன் (ஸல்).

கதபஹு
அஹ்கருல் இபாத்
ஷேக் முஹம்மத் அப்துல்கபூர்,
(ரப்பானீ) காதிரீ.

தப்லீக் மர்கஜ்
மன்னார்குடி.
14—6—56

பாரதி பிரஸ், மன்னார்குடி.

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
112949

கிடைக்குமிடம்:—

1. ஹாஜி S. A. அப்துல் லத்தீப் ரூவுத்தர்,
தஞ்சை ஜில்லா தப்லீக் அமீர்,
அரிசிக்கடை சந்து,
மன்னார்குடி.
(தஞ்சை ஜில்லா)

2. அ. மு. க. ஹனிபா ஹாஜியார்,
தப்லீக் அமீர்,
ஷாஜிலிய்யா தெரு,
அதிராம்பட்டணம்.
(தஞ்சை ஜில்லா.)

3. தப்லீக் மர்கஜ்,
பேகம் மஸ்ஜித்,
திருச்சி.

4. ஷேக் முஹம்மத் தம்பி — தப்லீக் அமீர்,
மாலிக் — M. S A. அபூபக்கர் & சன்ஸ்,
236. கிராண்ட்பாஸ் ரோடு,
கொழும்பு.

5. முஅல்லிப்,
தஞ்சை ஜில்லா தப்லீக் மர்கஜ்,
பெரிய பள்ளிவாசல்,
மன்னார்குடி.
(தஞ்சை ஜில்லா.)